கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு

(2014/2015) January-February, 2018

ED/S 2113 கல்வி உளவியல் (Educational Psychology)

நேரம் 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

## பகுதி – I

1.

அ) பிள்ளை விருத்தியென்பது அதன் வளர்ச்சியுடன் கூடிய தற்செயல் அனுபவங்களாகும். இதன் அடிப்படையில் பிள்ளை விருத்தி பற்றிய எண்ணக்கருவினை விளக்குக? (4புள்ளிகள்)

ஆ) பிள்ளை விருத்தியில் சூழல்சார் கற்றல் கொள்கை பற்றி உளவியலாளர்கள் கூறிய கருத்துக்களின் முக்கியத்துவத்தை விமர்சிக்குக? (5புள்ளிகள்)

இ) முதிர்வு என்றால் என்ன? உள முதிர்வு பற்றிய விளக்கம் கற்பித்தலில் ஆசிரியருக்கு ஏன் முக்கியத்துவமுடையதென்பதற்குரிய காரணங்களை நியாயப்படுத்துக? (5புள்ளிகள்)

2.

அ) விசேட தேவைகள்சார் கல்வி என்பதன் பொருளை விளக்கி , இக்கல்வி வழங்கப்பட வேண்டியோர்களின் ஆறு (06) வகைகளை குறிப்பிடுக ? (4புள்ளிகள்)

ஆ) கானே (Gagne) கூறிய கருத்தின் அடிப்படையில் வகுப்பறையில் மீத்திறனுடைய மாணவர்களை எவ்வாறு இனம் காண்பீர்? (5புள்ளிகள்)

இ) அறிவுசார் குறைபாடுடைய மாணவர்கள் என்பதன் கருத்தினை வரையறுத்து வகுப்பறையில் இம்மாணவர்களுக்கு கற்பிக்கும் போது நீர் அவதானிக்க வேண்டிய அம்சங்கள் ஆறு (06) கூறுக ? (5புள்ளிகள்)

3.

அ) புலக்காட்சி மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தியே ஞாபகம் ஆகும். ஞாபகத்தின் முதல்படியான மனனம் செய்தல் பற்றி உளவியலாளர்கள் கூறிய கருத்துக்களை விளக்குக? (4புள்ளிகள்)

ஆ) கற்றலில் எண்ணக்கரு என்பதனை விளக்கி , வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர் சிறப்பான எண்ணக்கரு விருத்தியை ஏற்படுத்த எவ்வாறான செயற்பாடுகளை பிரயோகிக்கலாம்? (5புள்ளிகள்)

இ) பிள்ளைகளின் பேச்சு வளர்சியைப்பாதிக்கும் காரணிகள் பற்றிய உமது கருத்துக்களை முன்வைத்து விளக்குக? (5புள்ளிகள்)

## பகுதி – II

4.

அ) அறிவுசார் விருத்திச் செயற்பாடு பற்றிய ஜீன் பியாஜேயின் கொள்கையடிப்படையில் உருவாக்கப்பட்ட விருத்திச் செயன்முறை நடைபெறும் நான்கு கட்டங்களையும் சுருக்கமாக விளக்குக? (8புள்ளிகள்)

ஆ) குழந்தைகளின் நுண்ணறிவு வளர்ச்சி பற்றி ஆய்வு செய்த ஜீன் பியாஜே சிந்தனை வளர்சிக்கட்டங்களை நான்கு கட்டங்களாக வகுத்தார். இக்கட்டங்கள் பற்றிய விளக்கங்களைச் சுருக்கமாக முன்வைக்குக?

(8புள்ளிகள்)

இ) புலோமின் (1985) மனவெழுச்சியின் தோற்றப்பாட்டில் உடல் , உளவியல் மாற்றங்களுடன் சமுதாய விழுமியங்களும் ஒன்று சேர்ந்துள்ளன. இதன் அடிப்படையில் பிள்ளையின் மனவெழுச்சி வெளிப்பாடு பற்றிய கருத்தினை விளக்குக? (8புள்ளிகள்)

5.

அ) தூண்டல் - துலங்கல் கோட்பாட்டின் அடிப்படையில் தோண்டைக் உருவாக்கிய மூன்று கற்றல் விதிகளை எவ்வாறு வகுப்பறையில் பிரயோகிப்பீர் என்பதை சுருக்கமாக விளக்குக?

(8புள்ளிகள்)

ஆ)பவ்லோவின் நிபந்தனைப்படுத்தல் கோட்பாட்டில் "நிபந்தனைப்படுத்தல்" என்னும் விடயத்தினை கற்றலுடன் தொடர்புபடுத்தி விளக்குக? (8புள்ளிகள்)

இ) மாணவர்களில் தொடர் மீளவலியுறுத்தல் செயற்பாட்டின் மூலம் சிறப்பான நடத்தையை உருவாக்க முடியுமென்பதை ஸ்கின்னர் தனது பரிசோதனை மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். மாணவர் கற்றலுடன் தொடர்புபடுத்தி இக்கருத்தினை விளக்குக? (8புள்ளிகள்)

6.

அ) " மக்டூக்கலின் கொள்கையின்படி இயல்பூக்கம் என்பது பிறக்கும் போதே ஒரு உயிரியிடத்தில் அமைந்துவிட்ட இயல்பான உளப்போக்காகும். மனிதனில் இவ்வகையான இயல்பூக்க நடத்தைகள் மூன்று உளக்கூறுகளாக தொழிற்பட்டு நடத்தைக்கு வழிகோலுகின்றன"

(I) இம் மூன்று உளக்கூறுகளின் செயற்பாடுகளை விளக்குக?

(II) வகுப்பறைக்கற்பித்தலில் இயல்பூக்கங்களை பிரயோகிக்கும் மூன்று செயற்பாடுகளை முன்வைத்து விளக்குக. (8புள்ளிகள்)

ஆ) நனவடி நிலையில் (Pre – Conscious) சேர்க்கப்படும் எண்ணங்களே பிள்ளையின் எதிர்கால நடத்தைக்கு ஊக்கமளிக்கின்றன. இது சிக்கமன் பிராய்டின் கருத்தாகும். இவை பிள்ளையின் எதிர்கால செயற்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குக?

(8புள்ளிகள்)

இ) ஒரு மாணவனின் நடத்தை மாற்றத்திற்குரிய அநேகமான காரணிகள் ஊக்கலின் தாக்கமாக அமைகின்றன. இதன்படி ஊக்கலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை வகுப்பறை செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி மதிப்பிடுக? (8புள்ளிகள்)

7)

பின்வருவனவற்றிற்கான விளக்கங்களைத்தருக?

அ) கற்றல் இடமாற்றம்

ஆ) முதிர்சியும் கற்றலும்

இ) கற்றலில் இயலாமை கொண்ட பிள்ளைகள் (Learning Disability)

ஈ) ஆளுமை விருத்தியில் சுய எண்ணக்கரு அணுகுமுறை (4x6 = 24 புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)